மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4—அரசினர் சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின் கீழுள்ள உள் இனம் (13) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1987) மற்றும் உள் இனம் (15) 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) (வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது, வேண்டுமென்றே போக்கு வரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக, ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்துசெய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1987) ஆகியவற்றை உள் இனம் (3) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987)க்கு முன் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்கள் வரி வசூலிப்பது சம்பந்தமாக ஒரு புதிய முறையை அமுலுக்கு கொண்டு வர சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளார், அதாவது, ஒரு பேருந்திற்கு அல்லது ஒரு மோட்டார் வாகனத்திற்கு உரிமம் புதுப்பிப்பதற்காகக்